**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை:திருமதி.S.சப்னா, B.B.M.,L.L.M.,**
**நீதித்துறை நடுவர், பல்லடம்**
**2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், வைகாசி திங்கள் 29 ஆம் நாள்**
**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.2100/2024**
**CNR No.TNTI11-003419 -2024**

அரசுக்காக:
உதவி ஆய்வாளர்,
காமநாயக்கன்பாளையம், காவல்நிலையம்,
குற்ற எண்.260/2024 - புகார்தாரர்

- எதிர் -

பழனிச்சாமி (வயது 54),
த/பெ. ராமசாமி கவுண்டர்,
6/100 பெரியகாட்டு தோட்டம்,
வெள்ளநத்தம், காட்டுர்,
பல்லடம், திருப்பூர். - எதிரி

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.2100/2024**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1 (P.Dis.No.36/2021) படியும் விதி 106 Criminal Rules of Practice – 2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |
| | | Palanisamy | 28.08.2024 | 28.08.2024 |
| (ii) | Date of filling of the complaint / final report in the court | Filling of Complaint | Filing of Final report | |
| | | Complaint Statement on 28.08.2024 | பல்லடம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 15.11.2024 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டது. | |
| (iii) | Date of Committal of the | Not applicable | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | case to the court of Sessions | | | |
| (iv) | Date of Questioning of the accused under section 4(1) (c) TNP Act as the case may be | 01.02.2025 | | |
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | -- | -- | -- |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1- Prakash | 08.06.2026 | 08.06.2026 |
| | | PW2- Moorthy | 08.06.2026 | 08.06.2026 |
| (vii) | Date of Examination of the accused under section 313 of the Code | | | 09.06.2026 |
| (viii) | Details of abscondance of an accused and his appearance/production, as the case may be | | | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | | | Nil |

இந்த வழக்கானது கடந்த 15.11.2024 ஆம் தேதி STC.No.2100/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப் பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 அவர்களும் எதிரிக்காக வழக்கறிஞர் திரு.P.ஈஸ்வரமூர்த்தி, B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும் இறுதியாக 10.06.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப் பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1)கடந்த 28.08.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் காமநாயக்கன் பாளையம் பகுதிக்குட்பட்ட பெரியகாட்டுதோட்டம், வெள்ளநத்தம், கெங்க நாயக்கன் பாளையம் பழனிச்சாமி என்பவருக்கு சொந்தமான வெள்ளநத்தம், பெரியகாட்டுதோட்டத்திலிருக்கும் தென்னை மரங்களில் பாலைகளை சீவி சுண்ணாம்பு தடவாத மண்பாணைகளை வைத்து சட்ட விரோதமாக அவருடைய சுய லாபத்திற்காக 5 லிட்டர் பிடிக்கக்கூடிய மண்பானையில் சுமார் 3 லிட்டர்

கள்ளை இறக்கி விற்பனை செய்ய வைத்திருந்ததாக எதிரி மீது பிரிவுகள் 4(1)(c) ofTNP Act ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக காமநாயக்கன்பாளையம், காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2)எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது அவருக்கு அரசு தரப்பில் சார்ந்து நின்ற ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் இலவசமாக கொடுக்கப் பட்டு, எதிரிக்கு போதியகால அவகாசம் கொடுக்கப் பட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது பிரிவுகள் 4(1)(c) of TNP Act ன் கீழான குற்றம் பற்றி குவிமுச பிரிவு 251 ன் கீழ் விளக்கி கூறி வினவியபோது எதிரி, குற்றத்தை மறுத்து கூறினார். எனவே அரசு தரப்பு விசாரணைக்கு வகை செய்யப்பட்டது.

3)அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரை குறியீடு செய்யப் பட்டு, எதிரி மீதான குற்றங்களை நிரூபிக்கும் வகையில், அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல்அ.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப் பட்டுள்ளது.

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:**

4)இவ்வழக்கானது அ.சா.1 பிரகாஷ் காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில்தலைமைகாவலராக பணியாற்றி வருவதாகவும் கடந்த 28.08.2024 ஆம் தேதி காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் திரு. மூர்த்தி மற்றும் காவலர் திரு.சந்தோஷ் காமநாயக்கன்பாளையம் காவல் நிலைய சரகத்திற்குட் பட்ட கேத்தனூர், எலவந்தி, கள்ளிபாளையம், புத்தரச்சல் ஆகிய இடங்களில் மதுவிலக்கு குற்ற தடுப்பு அலுவலக ரோந்து செய்து கொண்டிருந்த போது கிடைத்த இரகசிய தகவலின் பேரில் வெள்ளநத்தம் பெரியகாட்டுத் தோட்டத்தில் பழனிச்சாமிஎன்பவர் தென்னை மரங்களுக்கு இடையில் நின்று கொண்டிருந்த

ஒரு நபர் போலீஸ் பார்டியை கண்டிவுடன் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க அவர் பெயர் பழனிச்சாமி என்றும், வெள்ளநத்தம் பெரியகாட்டுத் தோட்டத்தை சேர்ந்தவர் என்று சொன்னவரை அவர் தன்னுடைய தென்னை தோப்பிலிருந்து தென்னை மரங்களிலிருந்து பாலைகளை சீவி சுண்ணாம்பு தடவாத மண் பானைகளை வைத்து சட்ட விரோதமாக தன்னுடைய சுயலாபத்திற்காக கள் இறக்கி அதை விற்பனை செய்ய வைத்திருப்பதாக சொல்லி அவர் தென்னை மரங்களுக்கு இடையில் மறைத்து வைத்திருந்த மண் பானைகளியிலிருந்த கள்ளை எடுத்து ஆஜர் செய்தவரை 28.08.2024 ஆம் தேதி 10.00 மணிக்கு கைது செய்து, பழனிச்சாமி ஆஜர்படுத்திய சுமார் 5 லிட்டர் பிடிக்க கூடிய சுமார் 3 லிட்டர் கள்ளை அதே இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாதால் என்னுடன் ரோந்துக்கு வந்திருந்த நானும் காவலர் சந்தோஷ் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 10.15 மணிக்கு அ.சா.ஆ.1 கைப்பற்றுதல்மஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றியதாகவும் கைப்பற்றிய வழக்கு சொத்தை போதிய பாதுகாப்பு வசதி இல்லாத காரணத்தினாலும், கெட்டுபோகும் தன்மை உடையது என்ற காரணத்தினாலும் அதே சாட்சிகள் முன்னிலையில் 10.30 மணிக்கு அ.சா.ஆ.2 அழித்தல் மகஜர் உதவி ஆய்வாளர் தயார் செய்ததாகவும் அதில் அ.சா.1 சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும் எதிரிகளை நிலையம் கொண்டு வந்து 11.30 மணிக்கு காவல் நிலைய குற்ற எண்.260/2024, சட்டப்பிரிவுகள் 4(1)(c) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் விசாரித்ததாக கூறியுள்ளார்.

5)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 மூர்த்தி, உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 28.08.2024 ஆம் தேதி காமநாயக்கன் பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது முதல் நிலை காவலர் திரு.பிரகாஷ் மற்றும் காவலர் சந்தோஷ் ஆகியோருடன் காமநாயக்கன் பாளையம் காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட காவல் நிலைய

சரகத்திற்குட்பட்ட கேத்தனூர், எலவந்தி, கள்ளிபாளையம், புத்தரச்சல் ஆகிய இடங்களில் மதுவிலக்கு குற்ற தடுப்பு அலுவலக ரோந்து செய்து கொண்டிருந்த போது கிடைத்த இரகசிய தகவலின் பேரில் வெள்ளநத்தம் பெரியகாட்டுத் தோட்டத்தில் பழனிச்சாமி என்பவருக்கு சென்றபோது அங்கு தென்னை மரங்களுக்கு இடையில் நின்று கொண்டிருந்த ஒரு நபர் போலீஸ் பார்டியை கண்டிவுடன் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க அவர் பெயர் பழனிச்சாமி என்றும், வெள்ளநத்தம் பெரியகாட்டுத்தோட்டத்தை சேர்ந்தவர் என்று சொன்னவரை அவர் தன்னுடைய தென்னை தோப்பிலிருந்து தென்னை மரங்களிலிருந்து பாலைகளை சீவி சுண்ணாம்பு தடவாத மண் பானைகளை வைத்து சட்ட விரோதமாக தன்னுடைய சுயலாபத்திற்காக கள் இறக்கி அதை விற்பனை செய்ய வைத்திருப்பதாக சொல்லி அவர் தென்னை மரங்களுக்கு இடையில் மறைத்து வைத்திருந்த மண் பானைகளியிலிருந்த கள்ளை எடுத்து ஆஜர் செய்தவரை 28.08.2024 ஆம் தேதி 10.00 மணிக்கு கைது செய்து, பழனிச்சாமி ஆஜர்படுத்திய சுமார் 5 லிட்டர் பிடிக்க கூடிய சுமார் 3 லிட்டர் கள்ளை அதே இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் இல்லாதால் என்னுடன் ரோந்துக்கு வந்திருந்த நானும் காவலர் சந்தோஷ் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 10.15 மணிக்கு மஜரில் நான் கைப்பற்றினேன். என்னுடன் ரோந்துக்கு வந்த முதல்நிலை காவலர் பிரகாஷ் மற்றும் காவலர் சந்தோஷ் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 10.15 மணிக்கு மஜரில் கைப்பற்றியதாகவும் கைப்பற்றிய வழக்கு சொத்தை போதிய பாதுகாப்பு வசதி இல்லாத காரணத்தினாலும், கெட்டு போகும் தன்மை உடையது என்ற காரணத்தினாலும் அதே சாட்சிகள் முன்னிலையில் 10.15 மணிக்கு அழித்தல் மகஜர் தயார் செய்ததாகவும் எதிரியை நிலையம் கொண்டு வந்து 10.30 மணிக்கு காவல் நிலைய குற்ற எண்.241/2024, சட்டப்பிரிவுகள் 4(1)(c) TNP Act ன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் சாட்சிகள் பிரகாஷ், சந்தோஷ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் அன்றே

புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4(1)(c) TNP Act குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

**<u>கு.வி.மு.ச பிரிவு313(i)(b)ன் கீழ் எதிரியிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில் :</u>**

6)அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகள் அனைத்தையும் பொய்சாட்சிகள் என்றும், பொய்வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப் பட்டது.

**<u>அரசு தரப்பு வாதம்</u>**

7)அரசுதரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையில், இவ்வழக்கில் விசாரிக்கப் பட்ட வாய் மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களைக் கொண்டு எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவுகள் 4(1)(c) of TNP Act ன் கீழான குற்றச் சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பால் நிரூபணம் செய்து விட்டதாகவும், அதனால் எதிரிக்கு அதிகப்பட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

**<u>எதிரி தரப்பு வாதம்:</u>**

8)இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றச் சாட்டுகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 251ன் கீழ் வினவிய போது, இவ்வழக்கு பொய்வழக்கு என்று கூறி, அரசுதரப்பு வழக்கை மறுத்துள்ளார். மேலும் அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அதில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவியபோது, சாட்சிகள் அனைத்தும் பொய்சாட்சிகள் என்று கூறி

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்துள்ளார். மேலும் எதிரி தரப்பில் முன்னிலையானகற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தின்போது இவ்வழக்கானது அரசு தரப்பால் புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றும், எதிரி விவசாயி என்றும், எதிரி ஒருபோதும் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றும், கைப்பற்றப்பட்ட கள் இரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்காததால் அது கள்தான் என்று உறுதிப்படுத்த அரசுதரப்பு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும், எனவே எதிரி சட்டத்திற்கு புறம்பாக கள் இறக்கி விற்பனை செய்வதாக சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுதரப்பில் தகுநிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

<u>9) தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான குற்றச் சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது? இவ்வழக்கானது கடந்த 28.08.2024 ம் தேதி 10.00 மணியளவில் காமநாயக்கன் பாளையம் பகுதிக்குட்பட்ட வெள்ளநத்தம், பெரிய காட்டுத் தோட்டம் பழனிச்சாமி என்பவருக்கு சொந்தமான தோட்டத்திலிருக்கும் தென்னை மரங்களில் பாலைகளை சீவி சுண்ணாம்பு தடவாத 5 லிட்டர் பிடிக்கக் கூடிய மண்பாணையில் சுமார் 3 லிட்டர் கள்ளை இறக்கி விற்பனை செய்ய வைத்திருந்தார் என்பதே அரசு தரப்பின் வழக்காகும்.

10)இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப் பட்டுள்ளது. அ.சா.1 மற்றும் அ.சா.2 சம்பவம் பற்றியும் எதிரியிடமிருந்து கள்ளை கைப்பற்றி அழித்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

11)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியால் புகார் பெறப்பட்டும் மீண்டும் அவரே வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக இருந்து சாட்சிகளிடம் பிரிவு 161 ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு உள்ள நிலையில் தகவல் பெற்ற அதிகாரியே இவ்வழக்கினை புலன் விசாரணை செய்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. இதுகுறித்து மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்முடிவான Megna Singh Vs State of Haryana (1996)11 SCC 709 என்ற தீர்முடிவில் பத்தி 4 ல் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

> 4. ………………… We have also noted another disturbing feature in this case. PW3 Srichand Head Constable arrested the accused and on search being conducted by him a pistol and the Cartridges were recovered from the accused. It was on his complaint a formal first Information report was lodged and the case was initiated. He being complainant should not have proceeded with the investigation of the case. But is appears to us that he was not only the complainant in the case but he carried on with the investigation and examined witness under sec. 161 Crpc. Such practice, to say the lease, should not be resorted to so that

மேற்படியான தீர்முடிவானது இவ்வழக்கிற்கு பொருத்தக் கூடியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12)இவ்வழக்கில் எதிரி கடந்த 28.08.2024 ம் தேதி அரசால் தடை செய்யப் பட்ட சுண்ணாம்பு தடவாத 5 லிட்டர் பிடிக்கக்கூடிய மண்பானையில் 3 லிட்டர் கள் இறக்கி விற்பனைக்கு வைத்திருந்ததால் பிரிவு 4(1)(c) TNP Act ன்படி தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்ததாக இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப் பட்டுள்ளது. மேற்படி குற்றத்தை நிருபிக்கும் பொறுப்பு அரசு தரப்பையே சார்ந்துள்ளது.

13)அ.சா.1, காவலர் சந்தோஷ் மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் கடந்த 28.08.2024 ஆம் தேதி மதுவிலக்கு ரோந்து பணியில் சென்று கொண்டிருந்த போது காமநாயக்கன்பாளையம், வெள்ளநத்தம், பெரியகாட்டுத்தோட்டத்திற்கு

சென்ற போது எதிரி பழனிச்சாமி என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களில் சுண்ணாம்பு தடவாத 5 லிட்டர் பிடிக்கக்கூடிய மண்பானையில் சுமார் 3 லிட்டர் கள் இறக்கி வைத்திருந்ததை தகவல் தெரிந்து அதனை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி சம்பவ இடத்திலேயே கொட்டி அழிக்கப்பட்டது என்றும் பின்னர் எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சாட்சியமளித்துள்ளார்.

14)கள் கைப்பற்றப்படும்போது தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937 பிரிவு 32 ன் கீழ் ஏதேனும் அலுவலர் அல்லது நபர் இச்சட்டத்தின் கீழ் கள்ளை கைப்பற்றினால் அவ்வாறான நபர் அல்லது அலுவலர் மதுவிலக்கு அலுவலர் முன்னிலையில் அல்லது ஆய்வாளர் படி நிலைக்கு குறையாத காவல்அதிகாரி முன்னிலையில் குறிப்பிடப்பெற்ற வழிமுறையில் குறிப்பிடப்பெற்ற அளவில் கள்ளை இருமாதிரிகளை எடுத்திருக்க வேண்டும்.

15)கள்ளை அழித்தும் அது வைக்கப்பட்டிருந்த பானைகள் மற்றும் கொள் கலன்கள் எடுக்கப்பட்ட மாதிரிகளுடன் சேர்த்து அழிக்கப்பட்ட கள்ளின் மொத்த அளவு எடுக்கப்பட்ட மாதிரிகளின் மொத்த அளவு முதலியன குறிப்பிடப் பெற்ற சான்றிதழ் ஒன்றை முன்னிலையாகிருந்த அலுவலரிடம் பெற்று வழக்கினை விசாரிக்க ஆள்வரை கொண்டுள்ள நீதித்துறை நடுவரிடம் அனுப்பி வைத்திட வேண்டும். மாதிரிகள் கிடைக்கப் பெற்றவுடன் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஒன்றினை நீதிமன்றத்தில் வைத்துக் கொண்டு மற்றொன்றினை இராசயனப் பகுப்பாய்வுக்கு உரிய அதிகாரியிடம் அனுப்புதல் வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

16)இவ்வழக்கில் மேலே குறிப்பிட்டுள்ள சட்டவரையறைகளை பின்பற்றி கைப்பற்றப்பட்ட சொத்தை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பி கள் தான் என்று

அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப் படவில்லை.

17)இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜருக்கு ஆதரவாக படிவம் 95 தயாரிக்கப் படவில்லை. கைப்பற்றப்பட்ட கள்ளின் மாதிரிகளை நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், இவ்வழக்கில் ரோந்து பணிக்கு சென்றிருந்தபோது மண்பானையில் இருந்த கள்ளை நிலையம் கொண்டு வருவதற்கு போதிய வசதி இல்லாததால் உதவிஆய்வாளர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டு சம்பவ இடத்திலேயே அழிக்கப்பட்டிருந்தாலும் மேற்படி கள்ளின் மாதிரியை எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பவில்லை. மேலும் கள் இறக்க பயன்படுத்தப்பட்ட ஏணி, அருவாள், அருவாள் வைக்கிற பெட்டி ஆகியவற்றை கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றும் எனவே, எதிரிகள் தான் குற்ற செயலில் ஈடுபட்டாரா அல்லது புள்ளி விவரத்திற்காக போடப்பட்ட வழக்கா என்ற ஐயம் ஏற்படுகிறது. மேலும் வழிகாட்டுதல் தீர்ப்புரையாக கீழ்க்கண்ட தீர்ப்பில் **Xavier V.State of Kerla 1998 (3) KLT 686 has held as follows – A case of this nature when the complainant himself is a police official the investigation should have been conducted by his top ranking officer and the final report also ought to have been filed by the higher official. A Complainant being a police officer cannot be an investigating officer. For in such case the accused and the prosecution will be deprived of their valuable rights of contradicting and corroborating the previous information recorded under section 154 or sec 155 Crpc and previous statement of the witness being a police officer complainant recorded under section 161 Cr.PC enjoined section 145 and 157 of the Indian Evidence Act and Proviso of Section 162 CrPc** என்று தீர்வு கண்டுள்ளது. இந்த முன்தீர்ப்பு இந்த வழக்கிற்கு பொருந்துவதாக அமைந்துள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18)இந்த வழக்கு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆராய்ந்து பார்க்கும் போது எதிரி கள் தான் வைத்திருந்தார் என்பதை நிரூபிக்கும் பொருட்டு எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சொத்தை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி எதிரி வைத்திருந்தது கள்தான் என்று உறுதிப்படுத்தப் படவில்லை. சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளின் மாதிரிகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எதிரி கள்ளை விற்க தான் வைத்திருந்தாரா என்பதனை அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிருபிக்கப்படாத காரணத்தினாலும் அரசு தரப்பில் சட்ட நடைமுறைகள் பின்பற்ற படாததாலும் அரசுதரப்பு வழக்கானது தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் நிருபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப் படுகிறது.

19)இறுதியாக, எதிரி மீது தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம்1937 பிரிவு 4(1)(c) TNPAct ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து மேற்படி பிரிவிலிருந்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

20)இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப் படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைகள் திருத்தப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 12 ம் நாளில் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.06.12 20:48:07 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

அ.சா.1 08.06.2026 திரு.பிரகாஷ், தலைமைகாவலர்

அ.சா.2 08.06.2026 திரு.மூர்த்தி, உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ.சா.ஆ.1/அ.சா. 1 28.08.2024 கைப்பற்றுதல் மகசர்

அ.சா.ஆ.2/அ.சா.1 28.08.2024 அழித்தல் மகசர்

அ.சா.ஆ.3/அ.சா.2 28.08.2024 முதல் தகவல் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்:</u>** இல்லை
**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருட்கள்:</u>** இல்லை.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.06.12 20:48:13 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**<u>குறிப்பு</u>**

1). எதிரி குற்றவாளி என தீர்மானித்து விடுதலை செய்யப்பட்டார்.
2). வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.
3). வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
4).வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
5).நகல் மாண்புமிகு திருப்பூர் தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.